1994 நவம்பர் 8]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு.

22-8-1994 ஆம் நாளன்று கொடவாசலில் நடைபெற்ற ஊர்வலத்தின்போது நிகழ்ந்த மோதல் சம்பவம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடவாசலில் நிகழ்ந்த ஒரு சம்பவம் பற்றி, பேரவையில் எழுப்பவேண்டும் என்று, பேரவை விதி 56-ன் கீழ், திரு. தம்புசாமி அவர்களும், திரு. பழனிசாமி அவர்களும் என்னிடத்திலே ஓர் அறிவிப்பு கொடுத்திருந்தார்கள். அதற்கு அன்றைக்கு நான் அனுமதி மறுத்திருந்தேன். மறுத்த நேரத்திலே வேறு வகையிலே உங்களுக்கு எழுப்புவதற்கு, செவ்வாய்க்கிழமை அனுமதி அளிக்கிறேன் என்றும் சொன்னேன். இருந்தும் அன்றைக்கு அவர்கள் கேட்கவில்லை. நான் சொன்னபடி, இன்று அவர்களுக்கு அனுமதி அளிக்கிறேன். அதை, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிற சிறப்புக் கவன ஈர்ப்பாக நீங்கள் இப்போது எழுப்பலாம். திரு. தம்புசாமி, சுருக்கமாக இந்தச் சம்பவம் பற்றி மட்டும் சொல்லவும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 22-8-1994 அன்று மைய அரசு கொண்டு வந்திருக்கிற புதிய பொருளாதாரக் கொள்கையான 'காட்' ஒப்பந்தத்தை எதிர்த்து, இந்திய நாடு முழுமையும் ஆர்ப்பாட்டங்களும், மறியல்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்த நேரத்திலேதான், கடந்த 22-8-1994 ஆம் தேதி, கொடவாசல் தாலுக்காவில், 'காட்' ஒப்பந்தத்தை எதிர்த்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தபால் நிலையத்திற்கு முன்னால், மறியல் நடைபெற்றது. அப்படி மறியல் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டவர்களைக் கைது செய்து, காவல் துறை அழைத்து வருகிறபோது - குடவாசலிலே தொடர்ந்து இப்படி ஜனநாயக இயக்கங்கள் தாக்கப்படுகின்றன என்பது அரசுக்கும் தெரியும். அதுபோன்று, அப்போதும் - ஊர்வலத்திலே மோட்டார் சைக்கிளை விட்டு மோத வைத்து, அதன் மீது ஒரு தகராறை ஏற்படுத்தி, அடிதடி ஏற்பட்டிருக்கின்றது. அந்த அடிதடியை நடத்தியதே இராஜேந்திரன் என்ற நபர். அவர்கள் அடிதடி நடத்துகிறபோது, அந்த அடியைத் தாங்க முடியாமல் காவல் நிலையத்திற்கு ஓடியபோது, காவல் நிலையத்திலும் கிட்டத்தட்ட 50, 60 பேர்கள் புகுந்த பிறகு, காவல்நிலைய வாசலிலேயே இராஜேந்திரன் என்பவர், தங்கையனை இரும்புக் கம்பியால் அடித்து, அங்கேயே மயங்கி, விழுந்து, பேச்சு மூச்சு இல்லாத நிலைமை ஏற்பட்டு, பிறகு காவல்துறை மூலமாக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். மருத்துவனையிலே அவர் இறந்துவிட்டார்.

இப்படி இறந்தபிறகுகூட, வழக்கு தொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த வழக்கின் முதல் குற்றவாளியாக இருப்பவர் இதுவரையிலும் கைது செய்யப்படவில்லை. ஆகவே, அந்தப் பகுதியிலே இருக்கிற மற்ற இதர மக்கள் மத்தியிலே ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இப்போது, அவர்களைப் பொறுத்தவரையிலும், எங்களுடைய தலைவர் வீரய்யன் தான் இதற்கு முழுமையும் காரணம், நான் அவரை கொலை செய்வேன் என்று தொடர்ந்து சவால் விடக்கூடிய சூழ்நிலைமை இருக்கிறது. இப்படிக் காவல்துறையைப் பொறுத்தவரையிலும். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இந்த சம்பவத்தைப் பற்றிச் சொன்னீர்கள். அடுத்து, உங்களுடைய கட்சித் தலைவரை கொலை செய்வேன் என்று அவர் மிரட்டுகிறார், இந்தச் சம்பவம் தொடர்ந்து நடைபெறுகிறது என்று சொன்னால் அது சரியாகாது. நீங்கள் கொடுத்த அறிவிப்பு ஒரு சம்பவம் பற்றியதுதான். (குறுக்கீடு) அவர் முடித்துவிடட்டும். அதனாலே அதற்கு மேற்கொண்டு வேண்டாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: ஒரு நபர் பெயரைச் சொல்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எப். ஐ. ஆரிலே இருக்கிறது என்று சொல்கிறார். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

திரு. வே. தம்புசாமி: இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. காவல்துறை இது குறித்து விசாரணை நடத்தும்போது, எஸ்.பி. திடீரென்று மாற்றப்படுகிறார். இதற்கிடையிலேகூட, தகராறு நடந்து, முதல் குற்றவாளியாக இருக்கிற நபரை, நம் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் காரில் அழைத்துப் போகிறார்கள். அவர்கள்....... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சம்பவத்தைக் குறித்து மட்டும் நீங்கள் சொல்லலாமே தவிர வேறு விஷயங்களைச் சொல்லக்கூடாது. இன்னும் சொல்லப்போனால், ஒருவர் பெயரைக்கூட நீங்கள் முதலிலே குறிப்பிடக்கூடாது என்று இருக்கிறது. நீங்கள் எப்.ஐ. ஆரிலே இருக்கிறது என்று என்னிடம் சொன்னீர்கள். எப்.ஐ.ஆரிலே இருக்கிறது என்று சொல்வதாலே (குறுக்கீடு) வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் காரில் அழைத்துச் சென்றார் என்பதற்கு நீங்கள் என்ன ஆதாரம் காண்பிக்க முடியும் ? (குறுக்கீடு)

1994 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்வார்கள், 'ஓணானுக்கு வேலி சாட்சி, வேலிக்கு ஓணான் சாட்சி' என்று. நடந்த சம்பவம் பற்றி குறிப்பிடுவதாகச் சொன்னார்கள். ஆனால் நான் சொல்வேன். 'நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்'. ஒரு ** சொன்னாலும், அந்த** மறைப்பதற்கு ஒன்பது ** சொன்னாலும் மறைக்க முடியாது. (குறுக்கீடு)

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது பொய் என்று ஒரு சந்தர்ப்பத்திலே இருக்கலாம். ஆனால் திரும்பத் திரும்ப இருக்கக் கூடாது. (குறுக்கீடு) அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : நான் பேசிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் பேசுகிறபோது நீங்கள் வேண்டுமானால் பேரவைத் தலைவருடைய அனுமதி பெற்று பேசுங்கள். இடையிடையே பேசுவது என்பது அவ்வளவு பொருத்தமல்ல என்று நான் கருதுகிறேன். நீங்கள் பேச வேண்டுமென்றால் பேசுங்கள். பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர், நண்பர் தம்புசாமி அவர்கள் சொன்னார்கள். நான் காரிலே அழைத்துக்கொண்டு போனேன் என்று. ஆனால் நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஒருவரைப் பற்றித் தெரிந்துகொண்டு அவர்கள் எப்படிப்பட்ட பழக்க வழக்கங்களைக் கொண்டிருக்கிறார்கள், எப்படி கட்சியிலே இருக்கிறார்கள், எப்படி கட்சியிலே அவர் பணி புரிகிறார் என்ற சாதாரண விவரம்கூட தெரிந்துகொள்ளாமல் நீண்ட நாட்களாக, அதுவும் ஒரு பொதுவுடமைக் கட்சியில் இருக்கிறாரே என்பதிலே எனக்கு மிக வருத்தம். மற்றொன்று நான் உங்களுக்குத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். மிகத் தெளிவாகச் சொல்வேன். இன்றல்ல, நேற்றல்ல, எப்போதுமே என்னுடைய கட்சியாக இருந்தாலும் சரி, என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, என்னுடைய நண்பராக இருந்தாலும் சரி, குற்றவாளி என்று சொன்னால், அந்தக் குற்றத்தை நீ போக்கடித்துவிட்டு வரவேண்டும், அந்தக் குற்றம் இல்லாமல் ஆக்கிக் கொண்டு வரவேண்டும் என்றுதான் சொல்வேனே ஒழிய, அந்தக் குற்றத்தை மறைக்கின்ற உணர்வுகளும், பண்பும் எனக்கு என்றும், இன்றும் இருந்ததில்லை. மற்றொன்றை நான் சொல்லவேண்டும். (குறுக்கீடு) ராஜேந்திரன் . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[1994 நவம்பர் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு பழனிசாமி, ஒரு அமைச்சரைக் குறிப்பிட்டு தனிப்பட்ட முறையில் அவரை குற்றஞ்சாட்டிச் சொல்கிறபோது அவர் பதில் செல்லாமல் எப்படி இருப்பார்? பழனிசாமி, நீங்கள் குறிப்பிட்டு ஒரு அமைச்சரைச் சொல்லி, அவரைத் தனிப்பட்ட முறையில் இந்தப் பிரச்சினையில் நீங்கள் குற்றம் சுமத்தும்போது அவரைத் தன்னிலை விளக்கம் அளிக்க நான் அனுமதித்துத்தான் தீரவேண்டும். நீங்கள் பொதுவாகச் சொல்லியிருந்தால் பரவாயில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதாவது வருவாய்த்துறை அமைச்சருடைய காரில் அழைத்துக்கொண்டு போனார் என்று சொல்லியாகி விட்டது. நான் அந்த இடத்திலே முதலிலே சொன்னதை மறுப்பதற்காகத்தான் எழுந்திருக்கிறேன். வருவாய்த்துறை அமைச்சரின் காரில் ஏறினார் என்று சொன்னால் நான் உங்களுக்குத் தெளிவாகச் சொல்கிறேன். வருவாய்த் துறை அமைச்சருடைய காரில் ஏறியதை நிரூபித்துவிட்டால் கட்சியிலிருந்தே, பொது வாழ்க்கையிலிருந்தே போவதற்கு நான் தயார்.

அதுமட்டுமல்ல என்னிடத்திலே சொன்னார்கள். அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள்தான். அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டு, நான் அவரிடத்திலே சொல்லியனுப்பினேன். உன்மீது எப்.ஐ.ஆர். என்று சொல்கிறார்கள். அவர் என்னிடத்தில் சொன்னார். எப்.ஐ.ஆரிலே நான் 2-வது, 8-வது, 10--வதில் 41-வதில் இருக்கிறேன் என்று சொன்னார். நீ எதிலே இருந்தாலும் சரி, நான் சொல்லியனுப்பினேன் உன்னைக் கைது செய்வார்கள். கைது செய்தால் நான் பொறுப்பாளி அல்ல. **ஆனால் காவல்துறை உன் மீது நடவடிக்கை எடுப்பதில் மற்றவர்கள் மீது எப்படி நடவடிக்கை எடுப்பார்களோ அதேபோல் நடவடிக்கை எடுப்பார்கள் என்று என்னிடத்திலே அவருக்காக வந்து சிபாரிசு செய்தவர்களிடத்திலே நான் சொல்லிவிட்டேன். காவல்துறையினர் மற்றவர்கள்மீது எப்படி நடவடிக்கை எடுப்பார்களோ அதேபோல் தான் உன்னிடத்திலேயும் எடுப்பார்கள் என்று நான் சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகு அவர் என்னுடைய காரிலே வருவதற்கோ போவதற்கோ இடமில்லை.

அதுமட்டுமல்ல, ஒன்றைச் சொல்கிறேன். முதலமைச்சருடைய நிகழ்ச்சி அங்கே நாகப்பட்டினத்திலே இருந்தது. முதலமைச்சருடைய நிகழ்ச்சிக்கு வரவேண்டுமென்று சொன்னார். நிகழ்ச்சிக்கு வரமுடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

1994 நவம்பர் 8] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

வரக்கூடாது. வந்தால் உன்னைக் கைது செய்வார்கள் என்று நான் சொன்னேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவர்கள் சொல்கிறபோது பேச்சு வழக்கில் ஒன்றைச் சொன்னார்கள். * *என்று சொன்னார். அது பேச்சு வாக்கில் சொன்னார். அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அது பேச்சு வாக்கிலே சொல்வதுதான். **

அடுத்து முதலமைச்சர் அவர்கள் விரிவாக அதிலே விளக்கம் தர இருக்கிறார்கள். முதலமைச்சருடைய விளக்கம்தான் அதற்குப் பொருந்துமே தவிர அவர் தன்னிலை விளக்கம் சொன்னதில் காரிலே ஏற்றிச் சென்றது வரையிலேதான் *(குறுக்கீடுகள்)*

முற்பகல் 11-15

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: நான் பதில் சொல்கிறேன்.

(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சம்பந்தம் இல்லாமல் அழகிரிக்கு என்ன இதிலே வேலை? சம்பந்தம் இல்லாமல் உங்களுக்கு என்ன வேலை? உட்காருங்கள். சம்பந்தப்பட்டவர் தம்புசாமி. அழகிரிக்கு இதிலே ஒன்றும் சம்பந்தம் இல்லை. இதிலே எல்லாம் வர முடியாது உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ...*(குறுக்கீடுகள்).*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்லக்குமார் முறை தவறி நடக்கிறீர்கள். செல்லக்குமார் முறை தவறி நடக்கிறீர்கள். நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். உட்கார்ந்து கொண்டு உங்கள் விருப்பத்திற்கு கை நீட்டி பேசுவதற்கு அனுமதிக்க முடியாது. நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். விதிமுறைகளைத் தெரிந்துகொண்டு நடந்து கொள்ள வேண்டும். இப்படி நடந்தால் அனுமதிக்க முடியாது. நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் குடவாசலிலே நடைபெற்ற ஒரு சம்பவத்தைப் பற்றி இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதற்கு என்னுடைய பதிலைப் பெற விரும்பினார். அப்படித்தான் தங்களிடம் சொல்லப்பட்டது. அதற்கு அனுமதி பெறப்பட்டது. அவர் அந்தச் சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டால்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

அதற்கு விளக்கமாகப் பதில் கூற நானும் தயாராக இருந்தேன். ஆனால் எடுத்த எடுப்பிலேயே மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்ட ஒரு நபரின் பெயரைச் சொல்லி, அவர்தான் அந்தக் குற்றத்தைப் புரிந்தார். அவர்தான் குற்றவாளி என்று அவரே குற்றமும் சாட்டி தீர்ப்பும் கூறிவிட்டார். ஆகவே அவர்கூறிய விவரங்கள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை என்பதைத் தெரிவித்து, உண்மையாக என்ன நடந்தது என்பதை இப்போது நான் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. செல்வராசன், உட்காருங்கள். நான் அனுமதித்தது சிறப்புக் கவன ஈர்ப்பாக எழுப்புவதற்குத்தான்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தம்புசாமி அவர்கள் ஒரு பிரச்சினையைப் பற்றி இங்கே பேசுகிறபோது ஒருவருடைய பெயரைக் குறிப்பிட்டு அவரே அந்தக் குற்றத்தைப் புரிந்து விட்டார் என்று அவர் தீர்ப்பும் கூறிவிட்டார். அதற்கு மேலே இதில் பேசுவதற்கு என்ன இருக்கிறது. அதற்கு என்னுடைய பதிலை நான் அளிக்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல இந்தச் சம்பவம் ஸ்பெஷல் மென்ஷனாக அனுமதிக்கப்பட்டது என்பதை நான் ஏற்கெனவே சொன்னேன். (குறுக்கீடு) அ. செல்வராசன் அவர்கள் இதில் ஒன்றும் கொடுக்கவில்லை. உட்காருங்கள். பரிதி இளம்வழுதியும் அ. செல்வராசனும் இதிலே சம்பந்தம் இல்லாத உறுப்பினர்கள். பரிதி உட்காருங்கள். இதிலே சம்பந்தம் இல்லை உங்களுக்கு. ஸ்பெஷல் மென்ஷனாக நான் அனுமதிக்கிறேன் என்று சொன்னேன் (குறுக்கீடுகள்) உட்காருங்கள் செல்வராசன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உட்கார வேண்டும். விதி 56ல் நான் அனுமதிக்கவில்லை என்றும் சொல்லிவிட்டேன். ஸ்பெஷல் மென்ஷனாக, சிறப்புக் கவன ஈர்ப்பாக அரசின் கவனத்திற்கு வேண்டுமானால் கொண்டு வாருங்கள் என்று தான் சொன்னேன். அதிலே நீங்கள் பிரச்சினையைச் சொல்லி இந்தப் பிரச்சினை பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம். அவ்வளவு தான். அதற்கு மேற்கொண்டு நீங்கள் திரும்ப விரிவாக விளக்குவதற்கு போன காரணத்தினாலேதான் பிரச்சினையே வந்தது. இப்போதும் முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பது . . . .

1994 நவம்பர் 8]

திரு. அ. செல்வராசன் : இல்லை, அமைச்சர்தான் பிரச்சினையாக எடுத்துக்கொண்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அவரைக் குற்றம் சொன்னதினாலே, நேரிடையாக, தனிப்பட்ட முறையில் அமைச்சரைக் குற்றம் சொல்லுகிறபோது அமைச்சருக்கு தன்னிலை விளக்கம் அளிக்க உரிமை உண்டு. (குறுக்கீடுகள்) செல்வராசன் உட்காருங்கள். செல்வராசன் இப்படிச் செய்வது முறையல்ல. தனிப்பட்ட முறையில் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை குற்றம் சுமத்திய காரணத்தினால் அவர் பதில் சொன்னார். அது தவிர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது தெரிவித்ததைப்போல குறிப்பிட்ட ஒருவரை குற்றம் சுமத்தி, அவர்தான் குற்றவாளி என்று ஊர்ஜிதப்படுத்தி திரு. தம்புசாமி அவர்கள் சொல்லியிருக்கிறார். அதற்கு என்னுடைய பதிலைக் கொடுத்து விடுகிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இப்போது அவருடைய பதிலை இங்கே தர இருக்கிறார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பு என்பதில் யார் யார் பெயர் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்வதுகூடப் போதும். அதற்கு பிறகு நான் பதிலை வாங்க முடியும். (குறுக்கீடு) இப்பிரச்சினையை நான் சொல்லிவிட்டேன்; தம்புசாமி அவர்கள் எழுப்பிவிட்டார்கள். நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள், தம்புசாமி அவர்கள் எழுப்பிவிட்டார்கள். அதே பிரச்சினைதான். எனவே யாராவது ஒருவரைதான் எப்போதும் அனுமதிப்பது. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடுகள்) அதைச் சொல்லியிருக்கிறார். நான் காரில் அழைத்துச் சென்றேன் என்று நிரூபித்தால் நான் ராஜினாமா செய்கிறேன் என்று வருவாய்த் துறை அமைச்சர் சொல்கிறார். அதற்கு முன்னால் தெரிவித்த சில கருத்துக்களைத்தான் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கினேன். (குறுக்கீடுகள்) அவரைத்தானே குற்றம் சுமத்துகிறீர்கள். (குறுக்கீடு) திரு. செல்வராசன் நீங்கள் இதிலே அறிவிப்புக் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) பழனிசாமி உட்காருங்கள்.

முற்பகல் *11-20*

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் சொல்லியதிலிருந்து இன்னும் பின்வாங்கவில்லை. அதாவது நான் என்னுடைய காரிலே அவர்களை அழைத்துச் சென்றிருந்தால், அதை நிருபித்துவிட்டால் நான் பொது வாழ்விலிருந்து நீங்குவேன் என்று சொன்ன வார்த்தையிலிருந்து நான் பின்வாங்கவில்லை. அதை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22-8-1994 அன்று, 'காட்' ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 400 பேர், கொடவாசல் ஊராட்சி ஒன்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் அய்யாறு என்பவரின் தலைமையில், ஓகை கிராமத்தில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டுள்ளார்கள். கொடவாசல் பஜார் பகுதியில் ஊர்வலம் சென்று கொண்டிருந்த பொழுது, வீரய்யன் மகன் சக்திவேல் என்பவர் மோட்டார் சைக்கிளில் வந்துள்ளார். ஊர்வலத்தில் சென்று கொண்டிருந்த காசிநாதன் என்பவர் மீது மோட்டார் பைக் இடித்துள்ளது. ஆனால் காசிநாதனுக்கு எந்தக் காயமும் ஏற்படவில்லை. கூட்டத்தில் இருந்த 50 பேர் கோபமடைந்து, அய்யாறு அவர்களின் தலைமையில், சக்திவேலுவை ஆயுதங்களால் தாக்கி இருக்கிறார்கள். சக்திவேல் அங்கிருந்து தப்பி ஓடி, ஆசைத்தம்பி என்பவரின் தையல் கடையில் தஞ்சம் புகுந்துள்ளார். ஆனால் கூட்டத்தினர் அப்போதும் அவரை விடாமல், உள்ளே புகுந்து தாக்கி உள்ளனர். சக்திவேல் அந்த இடத்தை விட்டு ஓடி இருக்கிறார். ஆசைத்தம்பி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று தெரிகிறது. அவரது கடையும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

சக்திவேல், ஊர்வலத்தினரால் தாக்கப்பட்ட விவரம் அறிந்தவுடன், உள்ளூரைச் சேர்ந்த 50 பேர் ஒன்று திரண்டு, ஊர்வலமாகச் சென்று கொண்டிருந்தவர்களைத் தாக்கியுள்ளனர். இந்தத் தாக்குதலில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தங்கையன் என்பவர் உள்பட, 20 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இதில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 4 பேர்களும் காயமடைந்தனர். அவர்களும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட பின்பு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக, ஊராட்சி ஒன்றியச் செயலாளர் திரு. ராஜேந்திரன், சம்பவ இடத்திற்குச் சென்று இரண்டு கட்சியினரையும் சமாதானப்படுத்தி உள்ளதாகத் தெரிகிறது. பின்னர் 23-8-1994 அன்று, தஞ்சாவூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த, கம்யூனிஸ்ட் கட்சி

1994 நவம்பர் 8] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

உறுப்பினர் தங்கையன் மரணடைந்தார். திரு அய்யாறு அவர்கள் கொடுத்த புகார்மீது, காவல் துறையினர், வீரய்யன் மகன் சக்திவேல் மற்றும் 50 பேர்மீது கொடவாசல் காவல் நிலைய குற்ற எண். 444/94–ல் இந்தியத் தண்டனைச் சட்டம் 147, 148, 323, 324, 336, 427 மற்றும் 302 ஆகிய பிரிவுகளின் கீழ், வழக்கு பதிவு செய்துள்ளனர்.

திரு. சக்திவேல் தாக்கப்பட்டது தொடர்பாக, கொடுக்கப்பட்ட புகார்மீது, அதே காவல் நிலைய குற்ற எண். 445/94--ல் இந்தியத் தண்டனைச் சட்டம், 147, 148, 323, 324 336, மற்றும் 427 ஆகிய பிரிவுகளின் கீழ் காத்தான் மகன் காசிநாதன் மற்றும் 50 பேர்மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

தங்கையன் மரணம் தொடர்பான வழக்கில் சக்திவேல், கார்த்திகேயன், முத்துச்செல்வன் மற்றும் 8 நபர்கள் இதுவரை காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். குற்றம் சாட்டப்பட்ட மற்றவர்கள் காவல் துறையினரால் தேடப்பட்டு வருகிறார்கள்.

இந்த வழக்கில் காவல்துறையினர், சட்டப்படி நடவடிக்கை எடுத்துள்ளார்கள். கட்சி பாகுபடின்றி, தவறு யார்மீது இருந்தாலும், அவர்கள்மீது வழக்கு தொடரப்பட்டு, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, காவல் துறையினர், இதில் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

3. கவன ஈர்ப்பு

வேலூர் சத்துவாச்சாரியை ஒட்டியுள்ள சமூக நலக் காடுகள் ஆக்கிரமிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடுகள்)

2. சிறப்புக் கவன ஈர்ப்பு-தொடர்ச்சி.

22-8-1994-ஆம் நாளன்று கொடைவாசலில் நடைபெற்ற ஊர்வலத்தின்போது நிகழ்ந்த மோதல் சம்பவம் குறித்து-தொடர்ச்சி.

பிற்பகல் *11-25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமி, நீங்கள் எப்.ஐ.ஆரில் இருக்கிறது என்று சொன்னீர்கள். அதனால் அனுமதித்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்.ஐ.ஆரில் இருக்கிற பெயர்களைப் படித்துக் காண்பித்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு இங்கே எந்தப் பிரச்சினையும் இல்லை. உட்காருங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சிறப்புக் கவன ஈர்ப்பு. இதில் திரும்பப் பேச அனுமதிப்பது இல்லை. திரு. ஞானசேகரன்.

திரு. வே. தம்புசாமி; **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இதற்கு மேல் பேச அனுமதிப்பது இல்லை. இதில் எப்போதும் பதில் தான் பெற முடியும்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லி முடித்த பிறகு உறுப்பினர்கள் தம்புசாமி, பழனிசாமி இருவரும் சொன்ன சொற்றொடர்கள் அனைத்தையும் தாங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அனுமதி இல்லாமல் பேசுகிற எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. ஆகவே, இப்போது அவர்கள் இருவரும் பேசியதும் அவைக் குறிப்பில் இருக்காது. திரு. ஞானசேகரன் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.